**இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் - 2020**

**-----------------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுகள்

-----------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------------------

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் செர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-------------------------------------------------------------------------------------------

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

------------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர இலங்கை சமுத்திர

பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்வி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படா-திருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்ககழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

---

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான

காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 30 ஆந் திகதி சனாதிபதி செயலகத்திலிருந்து அளிப்புகளாக கிடைக்கப்பெற்று தற்போது பயன்பாட்டிலுள்ள 06 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வருங் காலங்களில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதிருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உரியவாறு முகாமைத்துவம் செய்து கொள்ளப்படும். | 06 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) நிலையான சொத்துக்களை பராமரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா.4,298,618 ஐ மூலதனமயப்படுத்தியதன் காரணமாக குறித்த தொகையால், நிலையான சொத்துக்களை அதிகமாகவும் ஆண்டின் பற்றாக்குறை குறைவாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டுகளின் பொருட்டு கணக்குகளை செவ்வைபடுத்தி பராமரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதன செலவினம் என்பவற்றை செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.6.1 கிடைக்கப்பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இரண்டு ஆண்டுகள் விஞ்சிய மொத்தம் ரூபா. 21,258,931 ஆன கிடைக்கப்பெற வேண்டிய உருப்படிகளின் மீதியை அறவிடுவதற்கு மீளாய்விற்கான ஆண்டிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த மீதிகளை கணக்கீடுகளின் ஊடாக பதிவழிப்பதற்கு பல சந்தர்ப்பங்களில் தேவையான அனுமதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் அனுமதி கிடைக்கப்பெறாமை காரணமாக தொடர்ச்சியாக செயலற்ற மீதியாக நிலவுகின்றது. | கிடைக்கப்பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு அல்லது முறையான அனுமதியின் மீது பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் நிலவிய மொத்த பெறுமதி ரூபா. 20,748,514 ஆன செலுத்தப்பட வேண்டிய செலவினம் சீராக்குவ-தற்கு நடவடிக்கை மேற்கொள்ள-வில்லை என்பதுடன், அதனுள் 03 ஆண்டுகளுக்கு அதிகமான 08 மீதிகளின் பெறுமதி ரூபா.12,354,640 காணப்பட்டது. | எதிர்வருங் காலத்தில் தேவை-யான நடவடிக்கை மேற்கொள்-வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | சீராக்குவதற்கு தேவை யான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

### 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 2014 ஆண்டு பெப்ருவரி மாதம் 11 ஆந் திகதிய 02/2014 04 ஆம் இலக்க முகாமை-த்துவ சேவைகள் சுற்றறிக்கை | சுற்றுநிருபம் பிரகாரம் ஆராய்ச்சி குழுவால் ஆராய்-ச்சிகளின் முன்னேற்றம் தொடர்பாக திருப்தியடை-யாது, மீளாய்விற்கான ஆண்-டில் ஆராய்ச்சிக் கொடுப்-பனவு உரிய 32 அலுவலர்-களிடம் மொத்தம் ரூபா. 8,629,870 ஆன ஆராய்ச்சிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டி-ருந்தது. | ஒவ்வொரு ஆராய்ச்-சிகளின் முன்னேற்றம் தொடர்பாக திருப்தி-யடைந்தால் மட்டும் இனிவரும் காலத்திற்-கான கொடுப்பனவு-களின் பொருட்டு அனு-மதி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றுநிருபம் பிர-காரம் நடவடி-க்கை மேற்கொ-ள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாடுகளின் விளைபயன் ரூபா. 4,063,873 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 51,749,516 ஆகியது. அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 47,685,643 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் அளிப்புகள் மற்றும் ஏனைய வருமானம் அதிகரித்தலும், வேதனாதிகளின் செலவினம், பிரயாணச் செலவினங்கள், வழங்கல் பணிகளின் செலவினம், பராமரிப்பு செலவினம், உடன்படிக்கை சேவைகள், பயிற்சி செலவினம் மற்றும் ஏனைய செலவினங்களின் குறைவடைல்தலும் காரணமாக அமைந்தது.

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 நவம்பர் 05 ஆந் திகதி இரண்டு சந்தர்ப்பங்களில் i7 வகையினைச் சேர்ந்த 84 கணினிகளை கொள்வனவு செய்கையில் ஆகக் குறைந்த விலைக் கணக்குகளை சமர்ப்பித்த, விலைக் கேள்விபிணைப் பொறுப்பில் காணப்பட்ட சிறு குறைப்பாடுகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து செவ்வைப்படுத்திக் கொள்வதற்கு உசாவுதல்களை மேற்கொள்ளாது, ஆகக் குறைந்த விலை கணக்கு நிராகரிக்கப்பட்டமை காரணமாக பல்கலைக்கழக நிதியத்திற்கு ரூபா.416,400 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.<br><br>2006 அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 5.4.10 பிரிவு பிரகாரம், கணினி வழங்குநர்களிடத்தில் செயலாற்றுகை பிணை பொறுப்பு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.<br><br>தேவையினை செவ்வையாக எதிர்வுகூறாமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் ஒரே வகுதியைச் சேர்ந்த கணினிகளை கொள்வனவு செய்தமையால் ஏற்பட்டிருந்த விலை ஏற்றத்தாழ்வுகள் காரணமாக பல்கலைக்கழகத்திற்கு ரூபா. 480,000 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | 24 கணினிகளை கொள்வனவு செய்வதற்கு ஏற்புடையதாக விலைக் கேள்விப்பிணை பொறுப்பு துணைவேந்தருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தமையாலும், 60 கணினிகளை கொள்வனவு செய்வ-தற்கான கையேடுகள் சமர்ப்பிக்-காமை பிரதான விலகல் நிலை-யாக அடையாளம் காணப்பட்ட-மையாலும் தொழில்நுட்ப குழு ஆகக்குறைந்த விலை கணக-கினை நிராகரித்துள்ளது. செய-லாற்றுகை பிணை பொறுப்பு பெற்றுக்கொள்ளாமை குறைப்பாடு என்பதை கவனத்தில் கொள்-கின்றேன். 2021 ஆம் ஆண்டில் பெறுகை செயற்பாடுகளை ஆரம்-பிப்பதற்கு முன்னராக தேவைகளை அடையாளம் காணும் குழுவிடம் சமர்ப்பித்து அதன் முதன்மை அடிப்படையில் பெறுகை நடவடிக்-கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை குறிப்பிடுகின்றேன். | பல்கலைக்கழகத்திற்கு ஆகக்குறைந்த விலை கணக்குகளின் கீழ் கொள்வனவு செய்வ-தற்கு கவனம் செலுத்-தப்படல் வேண்டுமென்-பதுடன், பெறுகை வழிகாட்டலுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். ஆண்டுக்-கான பெறுகை திட்டம் படி கொள்வனவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) தொழில்சார் கல்வி துறையில் 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் தங்கல்ல, யாழ்ப்பாணம், நீர்-கொழும்பு, களுத்துறை, பானந்துரை, மட்டக்குளிய மற்றும் மட்டக்களப்பு ஆகிய நிலையங்களில் நடைமுறைப்-படுத்திய 13 கற்கைநெறிகளை விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை 20% ஐ விஞ்சியி-ருந்தது. இதற்கான | கற்கைநெறிகளை விட்டுச் செல்-லுதல் என்பது மாணவர்களின் தற்றுணிபின்படி நிகழ்வதாகும். கற்கைநெறிகளில் தரத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. கற்கைநெறிகளை பராமரித்தல் தொடர்பாக தற்போதுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கருதப்பட்டுள்ளது. | மாணவர்கள் கற்கை-நெறிகளை விட்டுச் செல்வதனை தவிர்ப்ப-தற்காக காலோசி-தமானதும் கற்கை நெறிகளின் தரத்தினை மேம்படுத்துவதன் மீதும் முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கற்கைநெறிகளை ஒழுங்கமைத்தல், தரம், கற்கை-நெறிகளின் காலோசிதம், கற்கை-நெறிகளை மேம்படுத்தல்களில் காணப்படுகின்ற பலவீனம் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) புதிய கட்டிடமொன்றை நிருமாணி-ப்பதற்கு போதியளவு இடவசதிகள் இருப்பினும், அது தொடர்பாக கவனம் செலுத்தாது, குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடம் பொருட்டு 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை ரூபா.86,792,671 இற்கு அதிகமான தொகையினை செலவிடப்பட்டி-ருந்தது. | 2015 தொடக்கம் 2020 வரை தொழில்சார் பயிற்சி மற்றும் உயர் கல்விப் பிரிவின் கற்கைநெறிகளின் பொருட்டு மாணவர்களின் எண்ணி-க்கையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ள-துடன், மட்டக்குளி பிராந்திய நிலையத்தின் வசதிகள் போது-மற்றதாலும், நிரந்தர கட்டிடம் நிருமாணிப்பதற்காக அமைச்சு நிதி ஒதுக்கீடு வழங்காமையாலும் உரிய பெறுகை நடைமுறைகளை பின்பற்றி குத்தகை அடிப்படையின் மீது கட்டிடம் பெற்றுக்கொள்ளப்-பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பணத்தினை சிக்கனமாக பயன்படுத்துவதன் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.2 மனித வளங்களின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் 35 பதவி வகுதிகளில 141 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் 47 ஆலோசகர்களின் வெற்றிட-ங்கள் பல ஆண்டுகள் தொடக்கம் இருந்து வந்தன. வேற்றிடங்களை நிரப்பாது ஒப்பந்த அடிப்படையின் மீது 25 ஆலோசகர்களின் சேவையினை பெற்றுக்கொண்டு மீளாய்விற்கான ஆண்டில் மட்டும் ரூபா.10,680,000 ஆன கொடுப்பனவை செலுத்தப்பட்டி-ருந்தது. அதேபோன்று அங்கீகரிக்-கப்பட்ட பணியாற்தொகுதியினரை விஞ்சிய 04 பதவிகளில் 11 அலுவல-ர்கள் கடமை நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டு அவர்களின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா 3,909,180 ஐ சம்பளம் மற்றும் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஊழியர்களை உள்ளீர்ப்புச் செய்கையில் மிகை ஊழியர்களின் பதவிகளுக்கு தனிப்பட்ட வகையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பணி-யாற்தொகுதியினறுக்கு ஏற்புடையதாக வெற்றிட-ங்களை துரிதமாக நிரப்பிக் கொள்வதற்கான பணிகளை மேற்கொள்-ளுதல் வேண்டும். முகாமைத்துவ சேவை-கள் திணைக்களத்திட-மிருந்து அனுமதி கிடை-க்கப்பெற்றவுடன், ஊழி-யர்கள் ஆட்சேர்ப்புச் செய்தல் பணிகளை துரிதப்படுத்துதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறையும் நள்ளாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் 9(1) பிரிவு பிரகாரம், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வருடாந்த அறிக்கை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதான வரையுள் வருடாந்த அறிக்கை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. . | 2018 அறிக்கை நிரல் வரிசை அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் அறிக்கை வரையுள்படுத்தப்பட்டுள்ளது. | வருடாந்த அறிக்கைகளை உரிய காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |